Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 194/2010

Deposition of witness for: PW - 7

| | | | |
|---|---|---|---|
| Name | : பொம்மையசாமி | Father/Husband Name | : பழனிச்சாமி |
| Age | : | Calling | : |
| Date | : 02.04.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 02 day of 04.2026.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

அரசுதரப்பில் முதல்விசாரணை

நான் தற்போது மதுரை மாவட்டம், குழந்தைகள் கடத்தல் குற்ற தடுப்பு பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

நான் கடந்த 08.01.2010 ம் தேதி 22.30 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது அசரப் அலி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று புகாரின் தன்மைக்கேற்ப கொட்டாம்பட்டி காவல் நிலைய குற்ற எண் 10/2010 இதச பிரிவு 279, 304(A)ன்கீழ் வழக்கு பதிவு செய்தேன். **(அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).**

பின்னர் வழக்கினை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைதினம் சம்பவ இடம் சென்று சாட்சிகள் யாதியாகான் மற்றும் செல்வராஜ் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜரில் உள்ள சாட்சியம் கையொப்பம் ஏற்கனவே அசாஆ ஆக குறீயீடு செய்யப்பட்டுள்ளது. ( **அந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அசாஆ 6 மற்றும் அசாஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ).**

பின்னர் சாட்சிகள் அசரப்அலி, அப்பாஸ், அப்துல்லதிப், சண்முகம்,

வெள்ளைசாமி, ஆகியோர்களை தனி தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் 09.01.2010ம் தேதி காலை 09.00 மணிக்கு மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து பஞ்சாயத்தாரர்கள் முன்னிலையில் பிரேத விசாரணை ஆரம்பித்து காலை 10.30 மணிக்கு முடித்து வைக்கப்பட்டது.( **அந்த பிரேதவிசாரணை அறிக்கை அசாஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது** ). பிரேத பரிசோதனைக்காக பிரேதத்தை தலைமை காவலர் 1052 ஹரிச்சந்திரன் என்பவரிடம் ஒப்படைத்து பிரேத பரிசோதனை பின்பு இறந்தவரின் பிரேதத்தை உறவினரிடம் நல்லடக்கம் செய்ய ஒப்படைத்துள்ளார்.

அன்றையதினமே விபத்தில் காயம்பட்ட நபருக்கு முதலுதவி அளித்து மேல் சிகிச்சைக்காக அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்த சிங்கம்புணரி ஆரம்ப சுகாதார நிலைய உதவி மருத்துவர் திரு. செந்தில் வேலன் என்பவரை விசாரித்து விபத்து பதிவேடு பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **(அந்த விபத்து பதிவேடு அசாஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).**

இவ்வழக்கில் இறந்துபோன செல்லையா என்பவரின் பிரேதத்தை மருத்துவமனையில் அனுமதித்து அவரது இறப்பை உறுதிசெய்து விபத்து பதிவேடு வழங்கிய மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை மருத்துவர் திருமதி.சுமதி அவர்களை விசாரித்து விபத்துபதிவேடு பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **(அந்த விபத்து பதிவேடு அசாஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது )**

கடந்த 09.01.2010ம் தேதி 18.00 மணிக்கு கொட்டாம்பட்டி காவல் நிலையம் முன்பு வைத்து நிலையத்தில் ஆஜரான இவ்வழக்கின் எதிரியான மகாராஜா த/பெ. ராசு என்பவரை காரணம் கூறி கைது செய்து நிலையம்

கொண்டு பாரா வசம் ஒப்புவித்தேன். பின்பு விசாரணை முடித்து இரு நபர் ஜாமீன் முன்னிலையில் விடுவித்தேன்.

பின்னர் 25.01.2010 ம் தேதி TN 55 D 5856, TVS 200 என்ற வாகனத்தை ஆய்வு செய்ய மேலூர் மோட்டார் வாகன ஆய்வாளரிடம் வேண்டுதல் கடிதம் கொடுத்தேன். 25.01.2010 ம் தேதி வாகனத்தை ஆய்வு செய்து சான்று வழங்கிய போக்குவரத்து தணிக்கை ஆய்வாளர் திரு.சக்திவேல் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

அதன்பிறகு நான் பணிமாறுதலில் சென்றுவிட்டபடியால் வழக்குகோப்பை பொறுப்பு மேலூர் காவல் காவல் ஆய்வாளர் திரு.பாலாஜி அவர்களிடம் ஒப்படைத்தேன்.

**எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

விபத்தில் இறந்த செல்லையாவிற்கு வயது 70 இருக்குமா என்றால் சரியல்ல, 60 வயது இருக்கும். விபத்திற்கு காரணமாக சொல்லக்கூடிய TVS XL மெதுவாக செல்லகூடிய வாகனம் என்றால் சரிதான். அதேபோல் விபத்தினை நேரடியாக பார்த்தாக எனது விசாரணையில் சொல்லியுள்ளார்கள் என்றால் இல்லை. பட்டியல் சாட்சி 1 முதல் 5 வரையான பட்டியல் சாட்சிகள் எதற்காக விபத்து நடந்த இடத்திற்கு வந்ததாக எனது விசாரணையில் சொல்லியுள்ளார்களா என்றால் இல்லை. மாதிரி வரைபடம், பார்வை மகஜர் சாட்சிகளுக்கு விபத்து நடந்த இடத்தில் வீடு இல்லை என்றால் சரிதான். அதேபோல் பார்வை மகஜர் சாட்சிகள் அந்த சமயத்தில் அந்த இடத்திற்கு வந்தார்கள் என்று எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பார்வை மசஜர் மற்றும் வரைபடத்தில் விபத்து நடந்த இடத்திற்கு எதிரே

உள்ள நத்தம் மீரா தென்னந்தோப்பில் உள்ளவர்களை இந்த வழக்கில் சாட்சியாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை.

2) இவ்வழக்கின் பட்டியல் சாட்சிகள் அனைவரும் எனது விசாரணையிலும், என்னிடம் கொடுக்கப்பட்ட புகார் மனுவிலும் எதிரி ஒட்டி வந்த இரு சக்கர வாகனத்தில் அவருக்கு பின்னர் ஒருவர் வந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு வந்தவர் யார் என்று எனது விசாரணையில் தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. அவ்வாறு இரு சக்கர வாகனத்தில் பின்னால் வந்தவர் குறித்து எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான். எனது விசாரணையில் எதிரி ஒட்டி வந்த இரு சக்கர வாகனத்தில் இரண்டு நபர்கள் வந்ததாக தெரியவந்துள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபடத்தில் விபத்து நடந்ததற்கான தடயங்களான ரத்தம் வாகனத்தின் உடைந்த பாகங்கள் இருந்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

3) அதேபோல் எனது விசாரணையில் விபத்தில் இறந்த செல்லையா சிங்கம்புணரியில் இறந்தார அல்லது மதுரையில் இறந்தாரா என்றால் மதுரையில் இறந்தார். இந்த வழக்கில் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையானவர்கள் வேட்டையன்பட்டியை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். 1 முதல் 5 சாட்சிகள் விபத்தில் இறந்துபோன செல்லையா என்பவரின் மாணவர் என்று தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. இவ்வழக்கில் சொல்லப்படுவதுபோல் எதிரி அதிவேகமாக சென்றதனால் விபத்து ஏற்படவில்லை, அவர் மெதுவாகவும், கவனமாகவும்தான் சென்றார், நான் தாக்கல் செய்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் விபத்தில் இறந்த செல்லையா வயதி முதிர்வு காரணமாக கண் பார்வை தெரியாமல் ரோட்டிலேயே நடந்து சென்றதனால்தான் அவரது கவனக்குறைவால்

ஏற்பட்டது என்றால் சரியல்ல. அவர் இறந்துபோனதனால் அவரது குடும்பத்தினர்கள் இழப்பீடு பெறுவதற்காக எதிரி மீது தவறுதலாக வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடம் செல்லாமல், மாதிரி வரைபடம், மற்றும் பார்வைமகஜர் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்விபத்து எதிரியின் கவனக்குறைவாலும், அதிவேகத்தாலும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.